Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 162
தொலைபேசி எண். 4?
போன் 889
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஆடி 7 ரபி ஆகிர் 25 திங்கட்கிழமை (22-7-68)

'ஹோப்' கப்பல்
கண்வைத்திய டாக்டர் போல்ட்வின்
அவர்களுடைய விரிவுரைகளில்
பங்குபற்றியவர்
D. சேனாதிராஜா
கண்ணாடி கட்டுபவர்—கண்பரிசோதகர்.
9, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.

# 'மாவட்டசபை' கைவிட்டதற்கு பிரதமர் டட்லி கூறும் காரணம்

## 'ஐக்கியத்தை வலுப்படுத்த தொடர்ந்து முயற்சி எடுக்கப்படும்'

கொழும்பு, திங்கள்

'மாவட்டசபைகளை மக்கள் விரும்பவில்லை. மக்கள் விரும்பாத எதையும் பலவந்தமாகத் திணிக்க நான் விரும்பவில்லையாதலால் மாவட்டசபைகள் மசோதாவைக் கைவிடவேண்டியுள்ளது. நாட்டின் மூன்று சமூகங்களுக்கிடையிலும் நல்லுறவையும் ஐக்கியத்தையும் வலுப்படுத்த தொடர்ந்து முயற்சிமேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்று ஆட்சிமன்றத்தில் சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் எடுத்துக் கூறினார்.

### பொய்ப்பிரசாரம்

திரு. டட்லி மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டசபைகள் பற்றி மக்கள் மத்தியில் எதிர்க்கட்சியினர் பொய்யான பிரசாரங்களை திரிவுபடுத்திக் கூறி மக்கள் மனதில் தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்கச் செய்துள்ளதாலேயே மக்கள் இதனை எதிர்க்கிறார்கள்.

சகல சமூகங்களும் ஐக்கியத்துடன் வாழ்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

விவசாயத்துறையில் நாடு பெருமளவு முன்னேறியுள்ளதாகத் தெரிவித்த திரு.

[6- பக்கம் பார்க்க]

## விடுதலை இயக்கம் தலைவரை நீக்கியது

கொழும்பு, ஞாயிறு

ஈழத் தமிழின விடுதலை இயக்கத்தின் செயற்குழு நேற்றுக்கூடி, அதன் தலைவரான திரு. வி. சுந்தரலிங்கத்தை தலைவர் பதவியிலிருந்தும் சாதாரண அங்கத்தவர் பதவியிலிருந்தும் விலக்குவதென ஏகமனதாகத் தீர்மானித்தது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை திரு. சுந்தரலிங்கம் எதிர்த்து நிற்பது தமிழ் சமூகத்தின் ஒற்றுமைக்கு மேலும் கெடுதி செய்வதுடன் ஈழத் தமிழ் இன விடுதலை இயக்கத்தின் கொள்கைக்கு முற்றிலும் முரணானதென்றும் எனவே தலைவர் பதவியிலிருந்தும் சாதாரண அங்கத்தவர் பதவியிலிருந்தும் திரு. வி. சுந்தரலிங்கத்தை உடனடியாக நீக்குவதென்றும் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.

## எல்லோரும் வெளியில் நின்று தரிசிக்கலாம்

### மாவை கோயில் பிரதிநிதிகளிடம் ஜி. ஜி. தெரிவித்துள்ள யோசனை

யாழ்ப்பாணம், திங்.

மாவிட்டபுரம் தேர்த்திருவிழா, வழக்கம்போல குழப்பமின்றி நடைபெற யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு சமரசத்திட்டத்தை நேற்று கோயில் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். இத்திட்டத்தை கோயில் பிரதிநிதிகளும், பக்தர்களில் பெரும்பாலோரும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவருகிறது.

மாவிட்டபுரக் கோயில் சம்பந்தமான பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தற்போது எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை 23ந்தேதி இரவுவரை பயனளிக்காத பட்சத்தில், தேர்த் திருவிழாவின்போது பக்தர்கள் எல்லோரும் வெளியில் நின்றே வணங்க வேண்டுமென்றும், கோயில் உபகாரர்களான அர்ச்சகர்கள், மேளகாரர், திருவிழாக்காரர், சுவாமி காவுவோர் மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் யோசனை கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி பொலிஸ் அதிபருக்கு எஸ். ஜே. வி. தந்தி

நல்லூர், திங்கள்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் வழிபடுபவர்களுக்கு அநாவசியமாகத் தொல்லை கொடுப்பவர்களை வெளியேற்றும்படி தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வடபகுதி பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. செல்வநாயகம் அனுப்பியுள்ள தந்தியில் கூறப்பட்டிருப்பதாவது:

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் வழிபடுபவர்களுக்கு அநாவசியமானவர்கள் தொல்லை கொடுப்பதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. அது உண்மையானால் அநாவசியமாகத் தொல்லை கொடுப்பவர்களை வெளியேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். [illegible] தர்களை வெளியேற்ற[illegible]டாம்.

மாவிட்டபுரம்:

## சமரச முடிவு காண்பதற்கு நான்கு கோரிக்கைகள்

### உயர்மகாநாட்டு தீர்மானங்கள் பற்றி அரசாங்க அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கதவுகளைத் திறத்தல், தொண்டர்படையை அகற்றுதல் ஆகியனபற்றி இறுதி முடிவுகளை மேற்கொள்ள அரசாங்க அதிபர், பொலிஸ்அதிபர் உட்பட சைவசமய பிரமுகர்களைக் கொண்ட தூதுக்குழுவொன்று இன்று மாவை ஆதீனகர்த்தா திரு. துரைச்சாமிக்குருக்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவிருக்கின்றனர். இதே குழு ஹரிஜனர்களையும் சந்தித்து திருவிழா முடிவுறும் வரை ஆலயப் பிரவேச இயக்கத்தைக் கைவிடுமாறு கோருவர்.

இந்த முடிவுகள் நேற்று மாலை நடைபெற்ற உயர்தர மகாநாடொன்றில் முடிவுசெய்யப்பட்டதாக பத்திரிகை நிருபர்களின் மகாநாட்டில் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தெரிவித்தார்.

இன்று துரைச்சாமிக் குருக்களைச் சந்தித்து பின்வரும் மூன்று கோரிக்கைகளையும் அவரிடம் கேட்பதென முடிவுசெய்யப்பட்டது.

ஃ மூடப்பட்டிருக்கும் கோவில் கதவுகளை உட[illegible] வேண்டும்.

ஃ கோவில் வாசலில் அமைக்கப்பட்டிருக்கும் தடையை உடனடியாக அகற்றவேண்டும்.

ஃ கோவிலில் கடமையாற்றும் தொண்டர் படையை உடனடியாக அங்கிருந்து அகற்றவேண்டும்.

சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளும் ஹரிஜனர்களையும் சத்தியாக்கிரகத்தைக் கைவிடுமாறும், இதனை திருவிழா முடிவடையும்வரை தொடர்ந்துநடத்தாதிருக்குமாறும் கேட்பதெனவும் இங்கு முடிவுசெய்யப்பட்டது.

நேற்று மாலை அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, பொலிஸ்

(6ம் பக்கம் பார்க்க)

## பெண்களுட்பட 500 பேர் சத்தியாக்கிரகம் செய்வராம்

யாழ்ப்பாணம், திங்கள்

'தேர்த் திருவிழாவின் போது வடபகுதியிலிருந்து பெண்கள் உட்பட சுமார் 500 ஹரிஜனர்கள் கோவிலில் சத்தியாக்கிரகம் செய்வார்கள். இதற்கான ஏற்பாடுகளெல்லாம் பூர்த்தியாகிவிட்டன.'

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க முக்கிய பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டுவில், மந்துவில் பகுதிகளிலிருந்து ஏராளமான ஹரிஜனப் பெண்களும் இச் சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ள முன்வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சங்கானை, சுன்னாகம் மற்றும் கோவில்களுக்குச் சமீபத்திலுள்ள இடத்திலிருந்து ஹரிஜனர்கள் 24-ம் திகதி அதிகாலை கால்நடையாகச் செல்வார்கள் என்றும், தூர இடங்களிலிருந்து வான்களிலும் பஸ்களிலும், ஹரிஜனர்கள் கோவிலுக்கு வருவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்

அவர் மேலும் கூறியதாவது:-

சத்தியாக்கிரகம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரைதான் நடைபெறும், சந்தர்ப்பம் கிடைக்கும் போது திடீரென எல்லோரும் கோவிலுக்குள் பிரவேசிப்பார்கள். இதனை எந்தச்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

ஒருவர்மீது அன்பாக இருக்கும்போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. பலர்மீது அன்பு செலுத்துகையில், நம் மகிழ்ச்சியும் அதிகரிக்கிறது. எல்லாரையும், எல்லாவற்றையும் நேசிக்கும்போது நமது இன்பத்துக்கு எல்லையுண்டா?

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Ceylon National Tamil Daily
Telegram: EELANAD
Post Box: 49 Jaffna
Telephone 389.

[illegible] ஆடி மாதம் 7-ந்திகதி (22-7-68)


## மாவட்ட சபைகளும் தமிழரசுக் கட்சியும்

சர்ச்சைக்குரிய மாவட்டசபை மசோதாவை முற்றாகக் கைவிடுவதென்று மந்திரிசபை தீர்மானித்திருப்பதாகவும் இதுபற்றி பிரதமர் நாட்டு மக்களுக்கு விளக்கம் கூற விரும்புவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இத்தகவல் எழுதப்படும்வரை தீர்க்கமாக எதுவும் தெரியவில்லை. சில வாரங்களுக்கு முன்னர் பத்திரிகை நிருபர்களின் மகாநாட்டில் பிரதமர் நாசூக்காக குறிப்பிட்டிருந்ததையும் ஆட்சிமன்ற மேல்சபையில் நீதியமைச்சர் சென்ற வாரம் சொன்ன சில வார்த்தைகளையும், இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் மக்கள் பிரதிநிதிகள் சபையில் தொழில் அமைச்சர் மாவட்டசபைகள் பற்றிக் குறிப்பிட்டதையும் மொத்தமாகக் கணித்துப் பார்த்தால் மாவட்ட சபை மசோதாவை அரசாங்கம் முற்றாகக் கைவிடுவதென்று தீர்மானிப்பது ஆச்சரியமல்ல. மாவட்டசபை மசோதா கொண்டுவரப்படாவிட்டால் தமிழரசுக்கட்சி என் செய்யும்; என்ன செய்ய வேண்டும் என்பதுதான் இன்று எழுந்துள்ள முக்கிய கேள்வி. மாவட்டசபைகள் கொண்டுவரப்படாமல்விட்டால் தமிழரசுக் கட்சியினருக்கு ஆத்திரமும் அதிருப்தியும் ஏமாற்றமும் ஏற்படுவது இயற்கை. ஆத்திரமும் அதிருப்தியும் ஏமாற்றமும் தமிழரசுக் கட்சிக்குள் குழப்பத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தக்கூடும். இன் விளைவாக தேசிய அரசாங்கத்துக்கு தமிழரசுக்கட்சி தொடர்ந்து உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுமா அல்லது உதவியையும் ஒத்துழைப்பையும் வாபஸ்பெற்று அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமா என்ற நிலையும் தோன்றக்கூடும்.

மாவட்டசபைகள் அமைப்பதற்கு பெரும்பான்மையினரின் கடுமையான எதிர்ப்புத் தெரிவிப்பதே மாவட்டசபைகள் கொண்டு வருவதற்கு அரசாங்கம் இதுவரை தயங்கியதும் இன்று முற்றாகக் கைவிடுவது என்று தீர்மானிக்கும் நிலைக்கு வர நேர்ந்ததும் காரணம் என்று கூறப்படுகிறது. பெரும்பான்மையினரின் எதிர்ப்பை ஏற்படுத்தியது எதிர்க்கட்சியினரும், மற்றும் சொந்த நோக்கங்களையுடைய சிலரும்தான் என்பதும் தெளிவு. இன்றைய எதிர்க்கட்சியினரான முன்னைய ஆளுங்கட்சியினரை ஆட்சிபீடத்திலிருந்து இறக்குவதற்கு தமிழரசுக் கட்சியினர் உடந்தையாக இருந்ததும், சென்ற பொதுத் தேர்தலின்பின் அவர்கள் ஆட்சிபீடமேறுவதற்கு உதவியளிக்க தமிழரசுக் கட்சியினர் மறுத்ததும், முன்னை அரசாங்கத்தைக் கவிழ்த்து இன்றைய அரசாங்கம் அமைத்த யு. என். பி.யினரும் அவர்களுக்கு உதவியளித்து உடந்தையாகவுமிருந்த இதர அரசியல் கட்சிகள் சிலவற்றின்மீதும் வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்கே இந்த மாவட்டசபைகளை எதிர்க்கட்சியினர் பெரும் பிரச்னையாக்கியிருக்கின்றனர் என்பது தெளிவு. 'தேசிய அரசாங்கம்' அமைப்பதற்கு தமிழரசுக் கட்சி உட்பட மற்றும் சில கட்சிகளுக்குமிடையில் 'இணைப்'பு ஏற்படுத்திய ஒரு சிலர்கூட இன்று மாவட்ட சபைகளை காரணமாகக் கொண்டு அரசாங்கத்தை வன்மையாக எதிர்ப்பதும் சொந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாது போனதுதான் என்று நிலவும் வதந்தியில் உண்மையில்லாமலிருக்க முடியாது.

எப்படியும் தமிழரசுக் கட்சியை தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேற்றி தேசிய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து நீக்கவேண்டுமென்பதுதான் 'மாவட்டசபை'களுக்கு பலவித இன, வகுப்புபேத 'முதலைக் கண்'ணீர் வடித்து பெரும்பிரச்னைகளை ஏற்படுத்தியிருப்பவர்களின் நோக்கம் என்பதில் ஐயமில்லை. மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவை பிரதமர், பிடிவாதமாகக் கொண்டுவந்தால், நாட்டில் வகுப்புக்கலவரங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி அமைதியைக் குலைக்க அவர்கள் தயாராக இருப்பார்கள். இத்தகைய "வெந்தவீட்டில் பிடுங்கியது அதி" என்ற மனப்பான்மையுள்ள குண்டர்களின் ஆதரவு எப்போதும் கிடைக்கும்.

மாவட்டசபைகள் மசோதாவைக் கொண்டுவராமல் தாமதிப்பதின் மூலம் அல்லது அதைக் கைவிடுவதன்மூலம் நாட்டின் அமைதியைப் பாதுகாப்பதில் அரசாங்கம் திருப்தியடையலாம். எதிர்பார்த்த அதிகாரங்கள் கிடைக்காத மாவட்ட சபைகளை அமைத்துக் கொள்வதற்குக்கூட இவ்வளவு எதிர்ப்புக் காட்டி, அரசாங்கத்தைக் கவிழ்க்க முனைபவர்களுக்கு இடம் கொடுக்காமல், அவர்களின் நோக்கத்தைத் தோல்வியடையச் செய்வதற்கு நிதானத்துடன் தமிழரசுக் கட்சியினர் நடந்து கொள்வது அவர்களுக்கும் நாட்டுக்கும் திருப்திதரும். மாவட்ட சபைகளுக்காக அரசாங்கத்தைவிட்டு வெளியேறாமல், அரசாங்கத்திலிருந்து கொண்டே தமிழ்மக்களின் இதர உரிமைகளைப் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்து, மாவட்டசபைகள் போன்ற அரசியல் அமைப்பு விஷயங்களில், அரசியல் நிர்ணய சபை ஒன்றை அல்லது சகல கட்சித் தலைவர்களையும் அறிஞர்களையும் சமய சமூகத் தலைவர்களையும் கொண்ட ஒரு மகாநாடு கூட்டி, ஒரு நல்ல முடிவுகாண தமிழரசுக் கட்சியினர் முயற்சிசெய்யலாம். இதுவே இன்றுள்ள நிலையில் விவேகமான செயலாகும். அரசாங்கத்திலிருந்து வெளியேறி, அதை ஆட்சிபீடத்திலிருந்து கவிழ்க்க தமிழரசுக்கட்சி காரணமாக இருந்தால் அடுத்துவரும் ஆட்சி அவர்களுக்கு [illegible]

## காகித ஆலை கூட்டுஸ்தாபன தலைவருக்கு அமைச்சர் பாராட்டு

வாழைச்சேனை, ஞாயிறு 'மூடப்படும் நிலையிலிருந்த காகிதத் தொழிற்சாலையை நாட்டில் தற்போது இயங்கிவரும் சிறந்த தொழிற்சாலைகளுள் ஒன்றாக மாற்றிய பெருமை இலங்கை காகித ஆலை கூட்டுத்தாபன தலைவர் திரு. கே. சி. தங்கராஜாவையே சாரும். அவரது முயற்சி காரணமாகவே இந்த ஆலை இவ்வித நிலையை அடைந்துள்ளது'

இவ்வாறு வாழைச்சேனையில் புதிய காகித அட்டைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டுவைபவத்துப் பேசுகையில் கைத்தொழில், மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன குறிப்பிட்டார்.

திரு. குணவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எத்தனையோ திறமைவாய்ந்தவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் ஆனால் அவர்களது திறமை ஒழுங்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. இத்தகையவர்களது திறமையைப் பயன்படுத்த நாம் முயற்சி மேற்கொண்டுள்ளோம்.

காகித ஆலை உயர்ந்த தரத்தை அடைந்துள்ளது. காகித அட்டையும் ஆரம்பிக்கப்பட்டால் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்திசெய்வது பெரிதும் உதவும். இதனால் வெளிநாட்டுச் செலாவணியை நாட்டுக்குத் தேவையான இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து பெறுவதற்கு பயன்படுத்தலாம்.'

உள்ளூர் தொழிற்றுறைகளை விருத்திசெய்வதற்கு உதவி வழங்கியுள்ள ஜேர்மன் சமஷ்டிக் குடியரசுக்கு இலங்கை மிக்க நன்றியுடையதாக விருப்பதாக திரு. குணவர்த்தன தெரிவித்தார்.

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் தூதர் திரு. எப். ஜே. ஹொக்மன் பேசுகையில், இலங்கையில் தொழிற்றுறை முன்னேற்றம் குறித்து இலங்கையர் மகிழ்ச்சியடைவதைப்போல் இந்த நாட்டின் இவ்வித அபிவிருத்திக்கு உதவிய ஜேர்மனியர்கள் நல்ல பலனைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள் என்றார். தமது அரசாங்கம் மேலும் உதவத்தயாராக வுள்ளதாகவும் எடுத்துக் கூறினார்.

காகித கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. சி. தங்கராஜா பேசுகையில், நாட்டின் அபிவிருத்திக்குத் தொழிற்றுறை எவ்விதம் உதவலாமென்பதை புதிய காகித அட்டை ஆலை நன்கு எடுத்துக் காட்ட ஒரு உதாரணமாக விளங்குமெனக் கூறினார். உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு இயங்கி விருத்திக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு காகித ஆலைத்தொழிற்சாலை ஓர் எடுத்துக்காட்டாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் நிறுவனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களின் சேவைகள் நன்கு கவனிக்கப்பட்டால் இன்னும் தொழில்துறை அபிவிருத்திகள் இங்கு ஏற்படுமென்றும் திரு. தங்கராஜா எடுத்துக் கூறினார்.

கல்குடா எம். பி. திரு. தேவநாயகம் காகித ஆலை கூட்டுத்தாபனத் தலைவருக்குத் தொழிற்சாலையின் வளர்ச்சி குறித்து நன்றி கூறினார்.

## "மாவட்ட சபைகளை இறுதிவரை எதிர்ப்போம்"

### கல்முனை எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு 'மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தங்கள் உடலில் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை கடுமையாக எதிர்ப்பர்' என்று கல்முனை எம். பி. ஜனாப் எம். சி. அகமது மக்கள் பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மான விவாதத்தில் கலந்துகொண்டு இன்று பேசுகையில்கூறினார்.

கிழக்குமாகாணத்தில் முஸ்லிம்களும் தமிழர்களும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனரென்றும் அங்கு சமூகஉறவு கெட்டதற்கு தமிழரசுக் கட்சிதான் காரணமென்றும் சொன்னார். மாவட்ட சபைகள் வந்தால் முஸ்லிம் மக்கள் அந்தஸ்தில் குறைந்துவிடுவார்களென்றும் அவர் கூறினார்.

லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில் மாவட்டசபைகளைவிட, வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களமக்கள் குடியேறுவதை தடுப்பதற்கென்று யு. என். பி. — தமிழரசு இரகசிய ஒப்பந்தத்திலுள்ள நாலாவது ஷரத்துதான் ஆபத்தானது என்றார்.

திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் அரசாங்கத்தைப் பணிய வைப்பதற்காக, தனித்தமிழ் நாடு கோரும்படி தனது வாலிப முன்னணியைத் தமிழரசுக் கட்சியினர் தூண்டிவிட்டுள்ளனர் என்றார்.

தமிழரசுக் கட்சியினரையும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் திரு கெனமன் தாக்கிப் பேசினார்.

## கி. ச. தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், இன்று பூநகரி - பல்லவராயன் கட்டு கிராமசபை புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 28-ம் திகதி காலை நடைபெறவிருக்கின்றது.

(த. நி.)

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ளன. மாத்தறையிலிருந்தும், அப்புத்தளையிலிருந்தும் நேரே கதிர்காமம் போவதற்கு மலிவு டிக்கட்டுகளும் போக வர டிக்கட்டுகளும் வழங்கப்படும்.

பத்துப் பேருக்கு மேற்பட்ட யாத்திரிகர் கோஷ்டிகளுக்கும் மலிவு டிக்கட்டுகள் வழங்கப்படும்.

கதிர்காமம் பொலிஸ்நிலையத்தில் உள்ளவர்களைத் தவிர 264 கூடுதலான பொலிஸ் உத்தியோகத்தர்களும் திருவிழாக் காலங்களில் பணிபுரிவார்கள். கதிர்காமத்துக்கு உள்ளேயும் விசேஷ போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

சங்கானை பட்டின சபையின் நிர்வாகத்தில் இயங்கும் சங்கானை சந்தையில் ஒரு நல்ல முயற்சி தோன்றியிருக்கிறது. பட்டின சபை ஊழியர் ஒருவர் சட்டபூர்வமான தராசும் எடைகளும் வைத்துக்கொண்டு இருக்கிறார். கடைக்காரர் எடைகுறைத்து அளந்தால் அல்லது அளந்ததாக சந்தேகித்தால் பொதுமக்கள் இந்த ஊழியரிடம் சென்று நிறை சரிதானா என்று சரிபிழை பார்த்துக்கொள்ளலாம்.

கண்ணியம் குறைந்த வியாபாரிகள் அளவைவெட்டுவதற்கு பலவிதமான கண்கட்டு வித்தைகளைக் காட்டி பொதுமக்களை ஏமாற்றுவார்கள். தராசைப் பிடித்து நிறுக்கும்போது சாடையாக ஒருபக்கத்தை விரல்களால் அமுக்கி தாழ்த்துவது, குறையநிறுத்துவிட்டு குறைந்த பக்கத்தைலேசாகதட்டி எழுப்பிவிடுவது, குறை கூலிகளையும் சேர்த்து நிறுப்பது. அரிசி முதலிய பொருட்களை நனைத்து வைத்து நிறுப்பது—இப்படி அநேகம் தந்திர ஜாலங்கள்.

பொதுமக்கள் அவர்களிடம் ஏமாந்து போகாதபடி தடுப்பதற்கு இது ஒரு நல்ல யுக்திதான்.

ஒருவர் அளவைக் குறைத்துவிட்டார் என்பதை பொலிஸ் நிலையத்தில் நிரூபிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. இருந்தபோதிலும் இப்படி ஒரு உத்தியோகபூர்வமான தராசும் படிகளும் இருப்பது வியாபாரிகளுக்கு ஒரு தடையாய் இருக்குமென்பது நிச்சயம்.

சுன்னாகம், கொடிகாமம், மானிப்பாய், பருத்தித்துறை, பண்டத்தரிப்பு முதலிய இடங்களிலுள்ள சந்தைகளை உள்ளூராட்சி மன்றங்களே நிர்வகிக்கின்றன. இச் சந்தைகளிலும், ஏன் இலங்கை முழுவதிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் எல்லா சந்தைகளிலும் இம்முறையைப் பின்பற்றி வியாபாரப் புலிகளிடமிருந்து பொதுமக்களைக் காப்பாற்றலாம்.

உள்ளூர் ஆட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படாமல் தனிப்பட்ட குத்தகைக்காரரால் நடத்தப்படும் சந்தைகளிலும் இப்படியான ஒரு சோதித்த தராசையும் படிகளும் வைத்திருக்க ஏற்பாடு செய்யலாம்.

ஃ

முருகனுடைய திருவிழாக்கள் இலங்கை முழுவதிலும் ஆடி ஆவணி மாதங்களில் வெகு சிறப்பாக நடைபெறும். வடக்கில் மாவிட்டபுரத்தானும், செல்வச்சந்நிதியானும், நல்லூர்க் கந்தனும், தெற்கே கதிர்காமத்தானும் அலங்காரபவனி வரப்போகிறார்கள். இந்நாட்களில் கண்டியில் நடக்கும் எசல பெரஹெராவிலும் கதிர்காமக் கந்தன் முக்கியமான இடம்பெறுவார். கொழும்பில் நடக்கப்போகும் ஆடிவேல் கந்தன் உற்சவத்தில் இம்முறை ஷேக் சின்ன மௌலானா சாஹிபுவின் நாகசுர இன்னிசையைக் கேட்கலாமென்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆடிவேல் விழாவுக்கு நேரே போக முடியாதவர்கள் வானொலி மூலம் சின்ன மௌலானாவைக் கேட்டு ரசிக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்.

கதிர்காமத்தில் இம்முறை வெகு தீவிரமான ஏற்பாடுகள் நடக்கின்றன. ரயில்வே, தரு கூட்டுச் சேவைகளை இ. போ. ச.வும், ரயில்வேப் பகுதியும் ஒழுங்குசெய்துள்

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகலாசாலைகளுக்கு பிரவேசம் பெறத் தகுதி பெற்றோர்

தேசிய உயர்கல்விச்சபை கடந்த மார்கழி ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சை முடிவுகளின்படி, இலங்கையின் நான்கு பல்கலைக் கழகங்களுக்கும் பிரவேசம் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப் பரீட்சார்த்திகள் மிருக வைத்திய துறை (பேராதனை) அல்லது விவசாய விஞ்ஞானம் (பேராதனை) அல்லது உயிரியல் விஞ்ஞானம் (4 பல்கலைக் கழகங்களுக்கும்) பகுதிகளில் ஒன்றுக்கு மனுச் செய்யலாம்.

இந்தப் பட்டியலில் தமிழ் மாணவ மாணவியரது பெயர்கள் மட்டும் உள்ளன.

கோட்டைமுனை மெதடிஸ்த் கல்லூரி: செல்வி ஜே. கல்யாணி.

தனிப்பட்ட: ஆர். எஸ். வேதநாயகம், வி. இளஞ்செழியன்.

மத்திய மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம்: வே. அரியரெட்ணம், பி. பாலேந்திரன், வி. கிருஷ்ணலிங்கம், பி. புவனேந்திரன், செல்வி பி. இந்திராதேவி, செல்வி விமலாதேவி.

தனிப்பட்ட: ஜி. சண்முகம்.

இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்: வி. கார்த்திகேயன், சே. சிவபாலன், எம். சிவசிதம்பரேசன், பி. யோகநாதன்.

இந்துமகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்: செல்வி வி. சந்திரயா.

பரியோவான் கல்லூரி - யாழ்ப்பாணம் - ஏ. சி. எஸ். ஜெயரஞ்சனி, ஆர். எஸ். ஜெயசந்திரன், ஏ. சிவபாலன், வை. வி. ஞானிவேல்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்: செல்வி எச். செல்லப்பா, செல்வி எஸ். சரவணமுத்து, செல்வி எஸ். திருநாவுக்கரசு.

சம்பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்: ரி. எம். நாகராசா.

திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்: செல்வி பி. எஸ். கே. நவரெட்ணம், செல்வி எம். பரஞ்சோதி.

வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்: செல்வி டி. சபாரெத்தினம், செல்வி கே. செல்லத்துரை, செல்வி வை. வேலாயுதம்.

உடுவில் மகளிர் கல்லூரி - சுன்னாகம்: செல்வி எச். ரி. ஆர். டான்ட்போர்த், செல்வி ஐ. நடராசா.

மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை: கே. ஜெயசிலன், ஏ. சிவகணேசானந்தன், ஆர். சிவகணேசன், எஸ். சிறீகுமாரன், எம். சுப்பிரமணியம், கே. யோகேஸ்வரமூர்த்தி, கே. நாகமணி, பி. சின்னையா, கே. சிவசுப்பிரமணியம், வே. குகசப்பிள்ளை, எம். திலகராஜா, வை. எஸ். விநாயகமூர்த்தி.

ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம் - சுன்னாகம்: கே. சாந்தகுமாரி, ஆர். ஜே. புஷ்பநாதன், வே. சின்னத்துரை.

ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை: ஆர். ஜீவசகாயம், எஸ். சாந்திகுமார்.

நெல்லியடி ம. மா. வி. - கரவெட்டி: இ. இருதயநாதன்.

யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை: ஏ. சிவநாதன்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணம்: க. ஏ. அரியரெத்தினம், கீ. நடராசா, எஸ். பத்மநாதன், எஸ். ஆர். ராஜபாலன், க. ஏ. ராஜநாயகம், எம். ரெத்தினம், எஸ். சிவபாதம், பி. ஐயாத்துரை, செல்வி வி. சந்திராதேவி, செல்வி எஸ். ஈஸ்வரரூபா, சி. குணநாயகம், என். கணபதிப்பிள்ளை, யே. பரம்சோதிராஜா, வ. பெரியதம்பி, செல்வி த. பிரமிளா, செல்வி கே. இலசமளா, ம. இயோராஜா.

புனித பேதுரு கல்லூரி - கொழும்பு-4: வி. ஏ. பகதியாப்பிள்ளை.

சைவமங்கையர் கழகம் - கொழும்பு-6: செல்வி எஸ். சிவராமலிங்கம்.

விசாக வித்தியாலயம் - கொழும்பு-5: செல்வி கே. சந்திரசேகரன், செல்வி சி. வேலுப்பிள்ளை.

மெதடிஸ்த் கல்லூரி: கொழும்பு-3: செல்வி எஸ். ஏ. யேசுதாஸ்.

மகளிர் கல்லூரி - கொழும்பு-7: செல்வி வி. ஜி. டி. தேவதாசன்.

ரோயல் கல்லூரி - கொழும்பு-7: ஆர். இந்திரலிங்கம், வி. திருச்செல்வம்.

பெம்புறூக் போதனா கழகம்: பி. சி. பி. ஞானப்பிரகாசம், வி. பிரேமகுமார், சி. ஏ. சிவநாதன், எம். தேவபாலன்.

அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரி - கொழும்பு-8: எம். ஆனந்தசயனன், ஜே. ஜே. எம். பரஞ்சோதிப்பிள்ளை, எம். எஸ். ஞானகுலிங்கம், கே. கைலாசபதி, எம். சபாரெத்தினம், ஐ. செல்வரை, கே. சிவப்பிரகாசம், வி. சிறீ ஜெயகுமார், ந. சிறிஸ்கந்தராசா, ந. சிறீஸ்கந்தராசா, ஆர். தனபாலசுந்தரம், எஸ். ரகுநாதன், ஐ. க. ஆனந்தநாயகம், சி. எம். யோகப்பிள்ளை, வி. சபாரெட்ணம், எஸ். சிவசங்கநாதம், செல்வி சி. சுபத்திராதேவி, எஸ். கதிரவேலு.

சஞ்ஞசையப்பர் கல்லூரி - கொழும்பு-10: எஸ். கணபதிப்பிள்ளை.

சாந்தபெனடிக்ற் கல்லூரி - கொழும்பு- 13: கே. நாயசிலன்.

கொட்டாஞ்சேனை ம. மா. வி. கொழும்பு- 13: எஸ். சூரியமூர்த்தி.

புனித தோமஸ் கல்லூரி - கல்கிசை: ஏ. எவ். ரெத்தினசிங்கம்.

கொழும்பு இந்துக் கல்லூரி - ரத்மலானை: வி. பரமசிங்கமணி, எஸ். பிரபாகரன்.

## கைதான பெண் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலியிலுள்ள சிறை ஒன்றில் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்ட ஆண் சிசுவொன்றின் சடலம் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட கைம்பெண்ணான சிவகுருநாதன் கனகமணியை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எம். ஜமீல் நேற்று விடுதலை செய்தார்.

கிணற்றில் கண்டெடுக்கப்பட்ட சிசு பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட கனகமணி ஏற்கனவே நீதிமன்றத்தில் 500 ரூபா பிணையில் விடப்பட்டிருந்தார்.

நேற்று நீதிமன்றத்தில் கோப்பாய் பொலிசார் கனகமணி மீது வழக்குத் தாக்கல் செய்ய போதிய சாட்சியங்கள் இல்லையென தெரிவித்ததைத் தொடர்ந்தே இவரை மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் விடுதலை செய்தார். [கா. நி.]

## இன்றைய பலன்

(22 - 7 - 68)

ஆடி மீ 7 உ.

திங்கட்கிழமை

திதி- துவாதசி பின் இரவு 2-13 மேல் திரயோதசி.

நட்சத்திரம்- மிருகசிரிடம் பி. இ 8-28 மேல் திருவாதிரை.

ராகுகாலம் - 7-31 9-01.

யமகண்டம்- 12-01— 1-31.

இன்று பிறந்தவர்களுக்கு: திருமணமாகாதவர்கள் வாழ்க்கையில் மணப்பந்தல் அமையும். செய்தொழிலால் சிறப்பு ஏற்படினும் செலவுகள் அதிகமாகவே இருக்கும். சிலர் வீணாகவே மனதை அலட்டிக்கொள்ளுவர். குடும்பத்தில் நல்ல முடிவு ஏற்படும். பிரிந்தவர்கள் வாழ்வில் இணைவர். பொறியியலாளர்களுக்கு இது போராட்டமான காலம். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதுடன், மன அடக்கத்துடனும் நடந்து கொள்ளவும்.

மேஷம்- ஒளிக்கதிர் பரவும், உல்லாச வாழ்வு.

ரிஷபம்- உழைப்பில் உற்சாகம், பயன்தரும் நாள்.

மிதுனம்- நிதானப் போக்கு, நிலைமையில் உயர்வு.

கடகம்-இருண்டமனம், இக்கட்டான நிலை.

சிம்மம்- தம்பதிகள் வாழ்வில் தவறும் தென்றல்.

கன்னி- எதிரிகள் வாய்வரி, ஏமாற்றமுண்டு.

துலாம்- அதிகாரபலம், ஆக்கவிருத்தி.

விருச்சிகம்- சாந்தகுணம், சன்மானமுண்டு.

தனுசு- எண்ணப்புதிர், கோபத்தைத் தவிர்.

மகரம்- மனோபலங்காரம், மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

கும்பம்- ஓட்டும் இரு உள்ளங்களை வெட்ட வரும் பகை.

மீனம்- இறையருள் கிடைக்கும், இன்பமும் நிலவும்.

சோதிடக்கலாநிதி

[illegible]

# 'ஆசிரியர்சங்க வளர்ச்சிக்கு முன்னோடியாய் இருந்தவர்'

## பாராட்டுவிழாவில் நல்லவர்

யாழ்ப்பாணம், திங்கள்

"இந்த நாட்டின் கல்வி, ஆசிரியன் கையிலேயே உள்ளது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதற்கிணங்க உயர்ந்த பதவியை வகிக்கும் ஆசிரியனின் சீரைக் குறைக்கும் தீய சக்திகளை ஒழிக்க, வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஒருபோதும் பின்நிற்கலில்லை இச்சங்கத்தின் பணி முட்டுப்பாடின்றாது நடப்பதற்குச் சங்கத்தின் முன்னோடியாய் இருந்து தொண்டாற்றிய மன்னார் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. எம். டானியல் ரூசு அதிமுக்கியமானவர் ஆவர்."

வட இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் தலைவராகவிருந்து பெரும் பணி புரிந்து, சமீபத்தில் ஓய்வு பெற்ற திரு. எம். டானியல் ரூச்சின் சேவையைப் பாராட்டி, மேற்படி ஆசிரியர் சங்கச் சார்பில் நடைபெற்ற உபசார விழாவில் பேசுகையில் தலைமைவகித்த பண்டிதர் ச. பொன்னுத்துரை பேசினார்.

திருவாளர்கள் இ. பொ. குமாரசாமி, ஆ. க. மாணிக்கம், க. இ. குமாரசாமி, இ. கந்தையா ஆகியோரது பாராட்டுரைகளுக்குப் பதிலளித்துப் பேசிய திரு. எம். டானியல் ரூச் பேசுகையில், வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், நேற்று முந்நாள் தோன்றிய சங்கமல்ல என்றும், இச்சங்க மூலம் ஆசிரிய-மாணவ உலகிற்குச் சேவைசெய்ய நம் போன்றவர்க்குக் கிடைத்த சந்தர்ப்பம் தவப் பேறென்றும், ஆசிரிய சேவையிலிருந்து விலகினாலுங்கூட, ஆசிரியர் சங்க வளர்ச்சிக்கு அயராது உழைப்பேன் என்றார்.

பாராட்டு விழாக் குழுச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் நன்றி கூறினார்.

## மாடுவெட்ட நகரசபை அனுமதி

யாழ்ப்பாணம், திங்கள்

"நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்துவீதம் சைவமக்கள் வாழும் இந்த நகரத்தில் சைவமக்கள் பூசிக்கும் பசுவை வெட்ட இச்சபை அனுமதியளிக்குமானால் இச்செய்கை சைவமக்களை அவமதிப்பதாகவேயிருக்கும்".

இவ்வாறு சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் மாடுவெட்ட அனுமதியளிப்பதுபற்றிய பிரேரணையை எதிர்த்துப் பேசிய அங்கத்தவரான திரு. கே. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நகரசபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. 5-ம் வட்டார அங்கத்தவரான திரு. ஆர். ஜெயரத்தினம் சாவகச்சேரி பட்டினத்தில் மாடுவெட்ட அனுமதியளிக்கவேண்டுமென்ற பிரேரணையை பிரேரித்தார். இப்பிரேரணையை 7-ம் வட்டார அங்கத்தவரான திரு. எஸ். பசுபதிசிங்கம் ஆமோதித்தார்.

இப்பிரேரணையை எதிர்த்துப் பேசிய திரு. மயில்வாகனம் இதுபற்றிக் குறிப்பிடுகையில் இப்பிரேரணையை விட்டுஒருமுடிவுக்குவருமுன் பொதுக் கூட்டமொன்றைக் கூட்டி மக்களின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டும் என்றார்.

இறுதியில் மாடுவெட்ட அனுமதியளிக்கவேண்டுமென்ற தீர்மானம் வாக்கெடுப்பின்பின்னர் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (கா. நி.)

## கடமையே கண்ணாயினர்

அளவெட்டி, ஞாயிறு

அதிர்ச்சியூட்டும் செய்தி கிடைத்தும் கடமையில் கண்ணுங்கருத்துமாய் ஈடுபட்டுள்ளார் வவுனியா முன்னாள் எம். பி. யும், மாவை கந்தன் ஆலய தொண்டர் படைத் தலைவருமான திரு. வி. சுந்தரலிங்கம்.

திரு வி. சுந்தரலிங்கத்தின் தம்பியாகிய திரு. தியாகலிங்கத்தின் மகனான திரு. தி. சோதிலிங்கம் காலமான செய்தி அறிந்தும் அவர் மாவிட்டபுரத்திலேயே நிற்கின்றார்.

## முதல் பரிசு பெற்றார்

உடுப்பிட்டி, ஞாயிறு

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கரவெட்டி கூடக்கு, வதிரியைச் சேர்ந்த திரு. செ. கிருஷ்ணதாஸ் (சின்னராசா) என்னும் இளம் ஓவியரின் சித்திரம் முதல் பரிசைப்பெற்றுள்ளது. இச்சித்திரம் கொழும்புப் பொருட்காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஆலய உற்சவம்

அல்வைப்பிட்டி, ஞாயிறு

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 30-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 8-ந் திகதி முடிவடையும்.

## பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ் காங்கிரஸ்பிரசாரக் கூட்டம் நாளை மாலை உசன் ஸ்ரீமுருகன் நூலகத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

பாரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. ரி. சிவசிதம்பரம் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 22—7—68**

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-06 தேர்ந்த இசை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 புல்லாங்குழல் 6-45 பாவலம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 முத்தி நெறி-சைவசஞ்சிகை, 8-00 முன்னிந்தி ச்சுனி, 9-30 [illegible] மாணவருக்கான விசிவுரை, 9-45 [illegible] மாலை.

"சூரியன் மார்க்"

வாசனை சந்தனப் பவுடர்

சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஒரு அன்டர்வுட் (ஆங்கிலம்) றெமிங்ரன் (தமிழ்) தட்டச்சு இயந்திரங்கள் வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் நல்ல நிலையில் விற்பனைக்கு இருக்கின்றன. அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். 31-7-68 நண்பகல் 12 மணி வரை மெழுகு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் சமாசத்தின் நிர்வாகக் காரியதரிசியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ச. இராமச்சந்திரன். 890

## தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சமாசம், 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்துக்கு 1,00,000 'சி' தர சாக்குகள் தேவை. 26-7-68 மதல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை நிபந்தனையுடன் பெற்றுக்கொள்ளவும்.

889 காரியதரிசி.

REGAL JAFFNA
Daily at
4-15, 7-00 & 9-45 P M
Marlon Brando
Yul Brynner
in
MORITURI

## தண்ணீர் வசதி கிடைக்கும்

பூநகரிக்கு விஜயஞ்செய்த கிளிநொச்சி எம். பி. திரு. வா. பொ இரத்தினம், விளவடி குற்சபிட்டிக்கும் சென்று பார்வையிட்டார். சுமார் அறுபதினாயிரம் மிளகாய்ச் செடிக்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் விவசாயிகளுக்குத் தண்ணீர் பெறுவதற்கு வேண்டிய ஒழுங்கு செய்வதாக அவர் சொன்னார். [ந நி]

# யாழ். உதைபந்தாட்ட சங்க நிர்வாகம் பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் நிர்வாகப் பிரச்னைகள் பற்றிய விசாரணைகளை நடாத்துவதில் இப்போது இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் தலையிட்டுள்ளது.

கவர்னர் ஜெனரல் திரு, வில்லியம் கோபல்லவவை பிரதம காப்பாளராகக் கொண்ட இலங்கை உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் நிர்வாக ஊழலை எதிர்த்து 14 கழகங்கள் அனுப்பிய கூட்டு எதிர் மனுக்களையும், தனிப்பட்ட கழகங்களின் எதிர் மனுக்களையும் கூடிய சீக்கிரம் பரிசீலனை செய்யவும் அவர்களின் குற்றச்சாட்டுகளுக்குத் தகுந்த பதிலை உடனே எமக்கு அறிவிக்கவும்.

இப்பிரிவினையை யாழ்ப்பாண உதைபந்தாட்டச்சங்கம் சுமுகமாகத் தீர்த்து வைக்காத பட்சத்தில் இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் நேரடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டி ஏற்படும் எனவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு இங்குள்ள விளையாட்டுக் கழகங்களும் உதைபந்தாட்ட ரசிகர்களும் பாராட்டுத்தெரிவித்துள்ளனர். (கா. நி)

கிளிநொச்சி கர பந்தாட்டப் போட்டி

# பரந்தன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி கரபந்தாட்டச்சங்கத்தின் ஆதரவில் சகல விளையாட்டுக் கழகங்களுக்குமிடையே நடாத்தப்பட்டுவந்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில், பரந்தன் விளையாட்டுக் கழகமும், பரந்தன் இரசாயன விளையாட்டுச்சங்கமும் மோதிக்கொண்டன. இப்போட்டி தொடங்கி முடிவடையும்வரை ரசிகர் மத்தியில் ஒரே பரபரப்பாய் இருந்தது.

இப்போட்டியின் முதல் ஆட்டத்தில் பரந்தன் விளையாட்டுக் கழகம் 15—7 புள்ளிகளாக வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் பரந்தன் இரசாயன கோஷ்டி 15-4 புள்ளிகளாக வெற்றிபெற்றது. இப்போட்டியின் கடைசி ஆட்டத்தில் இருகோஷ்டியினரும் மிகவும் திறமையாக விளையாடியதால் யார் வெற்றிபெறுவார்களென்று கூறமுடியாத நிலையில் இருந்தது. கடைசியில் பரந்தன் விளையாட்டுக்கழகம் 16 - 15 புள்ளி வித்தியாசத்தால் பரந்தன் இரசாயனக்கோஷ்டியைத் தோற்கடித்து 'சாம்பியனாகியது.'

பரந்தன் விளையாட்டுக் கழகவீரர் திரு. ஏகநாயகம் மிகவும் திறமையாக விளையாடினார். இப்போட்டிக்கு திரு. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [தே. நி.]

## விளையாட்டுப் போட்டி

அக்கரைப்பிட்டி, ஞாயிறு

தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெறவிருக்கின்றது. இப்போட்டியில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பல விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

வேலணை

## மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டி

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை மத்திய மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் ஜே. ரீ அரியரெட்ணம் தலைமையில் நடைபெற்றது. வடபகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். வெற்றி பெற்றோருக்கு திருமதி முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில்
காலை 10-30 மணி
ரகுநாதன்
சந்திரகலா
தங்கவடிவேலு
நடித்த
நிர்மலா
எம்.சி.ஆர்.பிலிம்ஸ்
வெளியீடு.

மானிப்பாய் வெஸ்லி
தினசரி 6-30, 9-30.
பீரி போயா, போயா 2-30
சிவாஜி கணேசன்-விஜயா
நடித்த
செல்வம்

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
பணமா பாசமா

## வரி விளம்பரம்

### தேவை

எனது சலூனுக்கு உடன் இரு தமிழ் வாலிபத் தொழிலாளர் தேவை. சாப்பாடின்றி ரூபா 6/- (ஆறு) நாளாந்த வேதனம். நேரில் வரவும், போ. அன்ரனி. 81, மெயின்வீதி. முல்லைத்தீவு. 1261

கூட்டுறவு வைத்திய சாலைக்கு 'டிஸ்பென்ஸர்' தேவை. 30-7-68க்கு முன் காரியதரிசி, வடமராட்சி கூட்டுறவு வைத்திய சாலைச் சங்கம். ஆத்தியடி, பருத்தித்துறை என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்குக. 1262

நவநாகரீக பொருட்களை விளம்பரம் செய்யவும், விற்பனை செய்யவும் பெண்கள் தேவை. நட்சாட்சிப்பத்திரத்துடன் 20 முதல் 23-7 68 வரை நேரில் தொடர்பு கொள்ளவும். றப்பி ஹவுஸ், 55, Main St., Jaffna 1584

### விற்பனைக்கு

இந்துசமயம்:

G. C. E. வகுப்பு 1969 — 1970 புதிய பாடத்திட்டப்படி வெநெறித் தொண்டர் ஆ. கந்தையா எம். ஏ. அவர்கள் எழுதிய இந்துசமயம் திருத்திய புதிய பதிப்பு விலை 3-50. ஸ்ரீ சாந்தா அச்சகம், புத்தகசாலை. 215, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1223

B. L. தொடரிலக்கம் மோறிஸ்மைனர். பெ, சந்தரவிலைக்கு [புறக்டர்], பருத்தித்துறை என்பவருடன் தொடர்புகொள்ளவும் 1258

வியாபாரத்துக்கு பொருத்தமான கடைகளுடன் கூடிய ஒரு ஏக்கர் நிலம் கிளிநொச்சி பட்டினத்தின் மத்தியில் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல; 1260. 'ஈழநாடு' மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1260

இவ்வருட விளையாட்டு சாம்பியன்களாக எம். ஜீவன், செல்வி ஜே இராஜேஸ்வரி, கே. திருஞானமூர்த்தி, என். நல்லநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் போட்டியில் வள்ளுவன் இல்லம் 189 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைக் கைப்பற்றியது. இளங்கோ இல்லம் 163 புள்ளிகளையும், கம்பனில்லம் 161 புள்ளிகளையும், பாரதி இல்லம் 141 புள்ளிகளையும் பெற்று முறையே 2-ம், 3-ம் 4-ம் இடங்களைக் கைப்பற்றின.

வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பி. சரோஜாதேவி
பி. எஸ். வீரப்பா, ஜெயலலிதா, நாகேஷ்
ஆகியோர் நடித்த
அரசகட்டளை

MANOHARA JAFFNA
Daily at 2-30, 6-30, 10-00 p.m.
Poya Days 10-30 A.M.
ஆர்ஸு [ஹிந்தி]
Rajendra Kumar & Sathana
in
ARZOO
[Hindi] [Eastman color]
Music:- Shanker, Jeikashian.

இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
கெபிட்டல் பிளாஸா மைலன்
(கொழும்பு)
விஜயா ராஜ் ஸ்ரீகிருஷ்ணா
[மட்டுநகர்] [நீர்கொழும்பு] [திருமலை]
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் நான்

இன்றுமுதல் கிங்ஸ்லி
[கொழும்பு]
2.00 மாலை 6.00, 9.30.
★ ஜெமினி கணேசன்
★ சரோஜாதேவி
★ தங்கவேலு
நடித்த
கல்யாணப்பரிசு

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
★ ஜெய்சங்கர்
★ எல்.விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
வல்லவன் ஒருவன்

வல்வை சனசமூகசேவா நிலையம்
வல்வெட்டித்துறை ஸ்தாபிதம்: 1943
வெள்ளிவிழா
காலம்: ஆவணி 14, 15-ந்திகதிகளில் நடைபெறும்
நிகழ்ச்சிகள்: மரதன் ஓட்டப்போட்டி 25 மைல்,
[வடமாகாணம் மாத்திரம்]
பேச்சுப்போட்டி இருபிரிவு
[1] 16 வயதுக்கு மேற்பட்டோர்
[2] 16 .. உட்பட்டோர்
[வடமராட்சி பகுதி மட்டும்]
விண்ணப்ப முடிவுதிகதி :- 1-8-68.
விபரங்களுக்கு:- செயலாளர், சனசமூகசேவா நிலையம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு தொடர்பு கொள்க. 891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரத்தில்

# ஆறு தினங்களின் பின் சுவாமி பகலில் வெளிவீதி வந்தார்

## சத்தியாக்கிரகம் நேற்றும் நடைபெறவில்லை

மாவிட்டபுரம், திங்கள்

**கடந்த ஆறு தினங்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிலில் நிலவிய குழப்பமான நிலைமை முற்றாக நீங்கி நேற்று நண்பகல் 12 மணிக்கு கந்தசுவாமியார், வள்ளிதெய்வானை சகிதமாக பக்தர்களின் 'அரோகரா' கோஷத்தின் மத்தியில் வெளிவீதிவந்தார். அச்சமயம் ஹரிஜனர்கள் எவரும் வெளிவீதியில் காணப்படவில்லை. தேரடியில நின்ற சுமார் 10 ஹரிஜனர்கள் ஆலயத்திற்குள் செல்ல எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.**

நேற்று நண்பகல்11 மணிமுதல் 1 மணிவரை கோயில் கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. பக்தர்கள்சென்றுவழிபட்டுச்சென்றனர். நேற்றுக்காலைமுதல் ஹரிஜனர்களின் சத்தியாக்கிரகம் நடைபெறவில்லை. காலை 10மணிமுதல் தேரடியில் 10 ஹரிஜனர்கள் நின்றனர்.

காலை 11 மணிக்கு சுற்றுப்பலி 'அரோகரா' கோஷத்துடன் வெளிவீதிபுறப்பட்டது. அச்சமயம் வெளியில் நின்ற ஹரிஜனர்களெவரும் உட்செல்ல முயலவில்லை. இதைத்தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு கந்தசுவாமியார் வெளிவீதிக்குப் புறப்பட்டார். விநாயகப் பெருமான் வலதுபக்கத்திலும், சண்டேஸ்வரர் பின்னாலும் சென்றனர். வீதிவலம் வந்தபோது பக்தர்கள் கும்பிட்டனர்.

முன்னால் மேளவாத்தியம் சென்றது. பின்னால் பெண்கள் உருக்கொண்டு ஆடிக்கொண்டு சென்றனர். அதன் பின்னால் பக்தர்கள் கோஷ்டியொன்று பக்திப்பாடல்கள் பாடிவண்ணம் சென்றது. தொண்டர்படைத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கமும் பின்னால் சென்றுகொண்டிருந்தார்.

சுவாமி புறப்பட்டபோதும் சரி, திரும்பவும் உள்ளே சென்றசமயமும்சரி. தேரடியில் நின்ற ஹரிஜனர்கள் கைகூப்பி வணங்கவில்லை. வேறுபக்கம் பார்த்துக்கொண்டு நின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் சுவாமி வெளிவீதி வந்தபோது, சுமார் 5000 பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். ஆதீனத்தினர் கட்டளைப்படி மாவிளக்கு முதலியவற்றை பக்தர்கள் வெளிவீதியில் படைத்தனர்.

வழமையிலும் பார்க்க இம்முறைகாவடிகள் குறைவாகவே காணப்பட்டன. சத்தியாக்கிரகம் நடைபெற்ற வெளிவீதியில் காவடியாட்டங்கள் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் சுற்றுப்பலி வெளிவீதி வந்தசமயம், வெளியில்நின்ற ஹரிஜனர்கள் உள்ளே செல்லமுயன்றபோது, தொண்டர்கள் அவர்களை உள்ளேசெல்லவிடாது தடுத்துவிட்டனர். பொலிஸார் உடனடியாக அங்குசென்று அமைதியை நிலைநாட்டினர்.

சுற்றுப்பலி மீண்டும் திரும்பிவந்தசமயம், தொண்டர்கள் தமது கைகளை இணைத்து, சுற்றுப்பலியை மட்டும் உள்ளேசெல்லவிட்டனர். ஹரிஜனர்கள் திரும்பிச்சென்றனர்.

## பெண்களுட்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

சக்தியாலும் தடுக்கமுடியாது.

ஆலயப்பிரவேசம் செய்ய முயன்றபோது தீப்பந்தத்தால் தடுக்கப்பட்ட சாமி கேசன்துறையைச் சேர்ந்த ஏ. கந்தையா கூறியதாவது:

நான் சைவசித்தாந்த ஆசார முறைப்படி கோவிலுள் செல்ல, தடுப்பது அநீதியான செயல். எனது உயிர் இருக்கும்வரையும் ஆலயப் பிரவேசத்தில் இறங்குவது தான் எனது இலட்சியம்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரின் அவசர கூட்டத்தில் சத்தியாக்கிரகத்தைத் தீவிரப்படுத்துவதென நேற்று தீர்மானிக்கப்பட்டது. (அ.நி.)

## எல்லோரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது எழுந்துள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்குக் காலம் போதாததால் திருவிழாக்களை முடித்த பின் இருபக்கத்தாரிடமும் தனித்தனியே ஆலோசனை நடாத்திப் பிரச்னையைத் தீர்க்கலாமென்றும் திரு. பொன்னம்பலம் கோயில் பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

கோயில் பிரதிநிதிகளான நாகவர் நேற்று முன்தினம் திரு. பொன்னம்பலத்தைச் சந்தித்து, கோயில் நடைமுறைகளை விளக்கிக் கூறி, வேதாகம முறைப்படி பூசைகளும், திருவிழாக்களும் நடைபெற ஒழுங்கு செய்யும்படி கோரினார்கள்.

இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட சைவப் பெரியார் ஒருவர், கொடிக்கம்பத்திற்கு அருகில், முன்கம்பிவேலிபோட்டு, எல்லோரையும் உள்மண்டபம் செல்ல அநுமதிக்கும்படி தெரிவித்த யோசனையை கோவில் பிரதிநிதிகள் நிராகரித்தனராம். இதைத் தொடர்ந்து, திரு. பொன்னம்பலம் மேற்கண்ட யோசனையைத் தெரிவித்தாராம்.

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமிஆலயத்தில் நாலாந் திருவிழாவாகிய இன்று பகல் 9-00 மணிக்குவசந்த மண்டப பூசையும் மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணி வரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியரால் ''காரைக்கால் அம்மையார்'' என்னும் பொருள்பற்றிய கதாப்பிரசங்கம் இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூசையும் நடைபெறும்.

## மாவட்டசபை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டட்லி 1970 ம் வருட தேர்தலில் யு. என். பி. பெருவெற்றியடையும் என நம்பிக்கைதெரிவித்தார்.

### நிறைவேறியது

இம்மாவட்டப் பிரசங்கம் மீதான நன்றிதெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 82 வாக்குகள் சாதகமாகவும் 48 வாக்குகள் எதிர்த்தும் வாக்களிக்கப்பட்டன. தமிழரசுக்கட்சியினர்வாக்களிப்பில் கலந்துகொள்ள மாட்டார்களென கடைசிவரை எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர்கள் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர்.

எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் தோல்வியடைந்தன.

### ஆர். ஜி. மட்டும்

ஆர். ஜி. சேனநாயகா [illegible] திருத்தப் பிரேரணைக்கு [illegible]

# "ஆட்சிபீடமேறியதும் பாகுபாடுகளை ஒழிப்போம்"

## கூட்டணி அறிக்கை

யாழ்ப்பாணம், திங்.

இலங்கை சமசமாஜ கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் கோவில் சத்திரத்தை சமூக, அரசியல் குழுக்களின் போர்க்களமாக மாற்ற விரும்பவில்லை ஏனெனில் இது ஆயிரக்கணக்கான மக்களது மத அபிலாசைகளை அவமரியாதை செய்வதாக முடியும்,

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் நேற்று கூட்டாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது,

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆலயப்பிரவேச இயக்கத்தையும், சாதி வேற்றுமை ஒழிப்பு இயக்கத்தையும், நடாத்தி வந்துள்ளனர். இத்தகைய நியாயமான கோரிக்கைகளுக்கு எமது இரு கட்சிகளும், பூரண ஆதரவுகாட்டி வந்துள்ளன சிறுபான்மைத் தமிழரின் நியாயமான ஜனநாயக கோரிக்கைகளை ஆதரிக்கும் நோக்கமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று திட்டமாக நம்புகிறோம்.

இப்பிரச்னையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்காக பண்டைக்காலத்து முறைகளை ஒழித்துக் கட்டுவதற்காக சமூகப்பாகுபாடு காட்டும் கோவில்களில் உயர் சாதியினர் வழிபாடு செய்யாது பகிஷ்கரிக்க வேண்டும். ஸ்ரீலங்கா, சமசமாஜ கம்யூனிஸ்ட் முன்னணி ஆட்சிபீடம் ஏறும் வேளையில், சமூக வேறுபாடுகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

# யாழ். ஆஸ்பத்திரியில் தொலைபேசி இயக்குனர் சங்கடம்

யாழ்ப்பாணம், திங்.

போதியதொலைபேசி இயக்குனர்கள் இல்லாததால் தொலைபேசிச் சேவையைச் சரியாகச் செய்யமுடியாத சூழ்நிலை இப்போது யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் உருவாகியுள்ளது

இங்குள்ள தொலைபேசி சேவையில் 24 மணி நேரமும் கடமையாற்ற 3 தொலைபேசி இயக்குனர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணமாகும். 440, 469. 493, 804, 241, 242 ஆகிய 6 தொலைபேசி இலக்கங்களுடன், சுமார் 80 உள்தொலைபேசி இணைப்புகளிடனும் இரண்டு தொலைபேசித் தொடர்புகளின் ஒருநேரத்தில் ஒருவர்மட்டுமே இங்கு கடமையாற்றுகின்றார்.

இவர்கள் மூவரும் 8 மணி முதல் 1 மணிவரை ஒருவரும், ஒருமணிமுதல்இரவு 8 மணிவரை இன்னொருவரும், இரவு 8மணி முதல் காலை 8 மணிவரை மற்றொருவருமாக இங்குகடமையாற்றநியமிக்கப்பட்டுள்ளனர். ஒரே நேரத்தில் இவர்களால் சகல தொலைபேசி இணைப்புக்களுடனும் தொடர்பு கொள்ள முடியாமலும், விரைவாக வெளித் தொடர்புகளையும் மேற்கொள்ள முடியாதிருப்பதுபற்றி மேலிடத்துக்கு இவர்கள் புகார் செய்துள்ளனராம்.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியிலும் பார்க்க குறைந்த தொலைபேசித் தொடர்புகளைக் கொண்ட அனுராதபுரம், கண்டி, திருமலை ஆகிய ஆஸ்பத்திரியிலேயே கூடுதலான தொலைபேசி இயக்குநர்கள் கடமையாற்றுகையில் வடமாகாணத்தின் முதல்தரமான யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 24 மணி நேரத்துக்கு 3 தொலைபேசி இயக்குனர்கள் மட்டும் கடமையாற்றப் போதாதிருப்பது பற்றியும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இங்குள்ள ஊழியர்கள் மேலிடத்தைக்கேட்டுள்ளனர். (கா. நி.)

# தடுத்ததாக நால்வர் மீது ஒரு ஹரிஜனர் புகார்

மாவிட்டபுரம், ஞாயிறு

தன்னைக் கோவிலுள் செல்லவிடாது தடுத்ததாக ஹரிஜனர் ஒருவர் நால்வர் மீது பொலிசில் புகார் செய்துள்ளார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நேற்று சுற்றுப்பலி வெளிவீதி வரும் சமயம் கதவு திறக்கப்பட்டபோது ஹரிஜனர்கள் உள்ளே செல்ல முயன்றார்கள். அவர்களுள் ஒருவரான ஏ. கந்தையா என்பவர்தான் உள்ளே செல்ல முயன்றபோது அகில இலங்கை சைவ அனுட்டான சபைத் தலைவர் த. சிவலிங்கம், எஸ். கந்தையா, என். வல்லிபுரம், எம். அப்பையா ஆகியோர் தடுத்ததாக மாவிட்டபுரம் தற்காலிக பொலிஸ் நிலையத்தில் சார்ஜன்ட் வடிவேலுவிடம் புகார் செய்துள்ளார்.

இதுசம்பந்தமாக பொலிசார் ஆதிவிசாரணை நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சிலப்பதிகாரச் செந்நெறி நூல் வெளியீட்டு விழா யாழ். மலாயா கபே கேள்மாடி மண்டபத்தில் நாளை மாலை 4-30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

உப சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் நூலை வெளியீடுசெய்வார். திரு. சி. சரவணபவன் [சிற்பி] ஆய்வுரை வழங்குவார்.

[ந நி]

## சமரச முடிவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், செனட்டர் நடராஜா, உடுவில் எம். பி. திரு. திரு, வி. தர்மலிங்கம், காரியாதிகாரி திரு. பற்றிக் திரு. எம். வைரமுத்து, வழக்கறிஞர் எஸ். சிவசுப்பிரமணியம், வழக்கறிஞர் எம். பொன்னையா, முதலியார் சின்னத்தம்பி, திரு. எஸ். சின்னத்தம்பி பொதுஜனத்தொடர்பு அதிகாரி திரு. செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்று கோரப்படவிருக்கும் 5 கோரிக்கைகளையும் திரு. துரைச்சாமிக் குருக்கள் ஏற்காவிட்டால் தேர்த் திருவிழா உட்பட மற்றைய திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறுவதனையில் சில திடீர் நடவடிக்கைகளை அரசாங்க உயர்தர அதிகாரிகள் மேற்கொள்ளவாமென வும் இதற்கான பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இக் கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [கா. நி]

அவர் மட்டுமே வாக்களித்தார்.

## மயிலிட்டி இ. ச. தலைவர்

உடுவில், ஞாயிறு

மயிலிட்டி கிராமசபையின் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 26-ம் திகதி காலை மயிலிட்டி கிராம சபை மண்டபத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேல் தலைமையில் நடைபெறும்.

கிராமசபை அங்கத்தவர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலில் ஏற்பட்ட தவறுதல் குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனை காரணமாக செவ்வாய்கிழமை நடைபெற இருந்த இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

## லொறி விபத்தில் பெண் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

கொட்டடியில் நேற்றுக் காலை நடைபெற்ற லொறி விபத்தொன்றில் நாகலிங்கம் தையல்முத்து என்ற பெண் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட லொறிச் சாரதியான சுப்பையாகனகரத்தினம் என்பவரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் அவரை அடுத்த மாதம் 4-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

மரணமான பெண்ணை மோதிய லொறி அவரை சுமார் 15 அடி தூரத்துக்கு இழுத்துச்சென்றதாக மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. சாரதியின் கவலையீனத்தால் இவ் விபத்து நடைபெற்றதாகவும் மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் குறிப்பிட்டார். [கா. நி]

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org